செ.வெ.எண்: நாள்:20.07.2021

**நாமக்கல் மாவட்டம்**

**மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் - குழுவின் தலைவர் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எ.கே.பி.சின்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

**-----**

நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (DISHA) கூட்டம் குழுவின் உறுப்பினர் செயலர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பெ.ராமலிங்கம் அவர்கள், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், குழுவின் தலைவர் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எ.கே.பி.சின்ராஜ் அவர்கள் தலைமையில் இன்று (20.07.2021) நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள், பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டப்பணிகள், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டப்பணிகள், பிரதம மந்திரி கிராம சாலை திட்டப்பணிகள், தூய்மை பாரத இயக்கம், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கான எரிவாயு உருளைகள் இணைப்பு வழங்கும் திட்டம் (பிரதம மந்திரி உஜ்வாலா திட்டம்) ஆகிய திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம், ஒருங்கிணைந்த நீர்நிலை மேலாண்மை திட்டம், மின்னணு தேசிய வேளாண் சந்தை, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தடுப்பணை கட்டும் பணிகள், சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் அமைக்கும் பணிகளின் முன்னேற்றம், சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், பெண் குழந்தைகளை பாதுகாப்போம் திட்டம், சமக்ர சிக்ஷா அபியான் திட்டம், உதய் திட்டம், தீன தயாள் அந்தியோதயா யோஜனா, சியாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் உள்ளிட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பணிகள் அனைத்தும் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி தரமாகவும், குறித்த நேரத்திலும் முடிக்கப்பட வேண்டும் என நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சு.வடிவேல் உட்பட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.